**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No.31/2025</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.1 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A. LL.B., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேல்முருகன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | கலியமூர்த்தி | கிராமம் | : | சீதக்கமங்கலம் |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 50 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இதற்கு முன்பு நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை கோரி அசல் வழக்கு எண்.93/2008 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 23.12.2009 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எண்.93/2008 தள்ளுபடி செய்யப்பட்டு அதனை எதிர்த்து திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். AS.02/2010 என்று மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி AS.02/2010 கடந்த 28.10.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் புல எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அசல் வழக்கு எண்.93/2008 ல் இவ்வழக்கின் வழக்கு சொத்தினை பொறுத்து தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனது எனது பெரியப்பா மகன் லோகநாதன் மனைவி நாகலெட்சுமி குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்திற்கு கிழக்கில் வாதி வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் 2008 ல் குடியிருந்து வந்தார். தற்போது வாதி அதில் குடியிருந்து வரவில்லை. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்துதான் தாவா சொத்து என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை

12.09.2012 அன்று ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 03.03.2012 அன்று மேல்முறையீடு வழக்கான AS.02/2010 வழக்கில் சார்பு நீதிமன்ற உத்தரவுப்படி நில அளவையர் உதவியுடன் சர்வே எண்.44/18 யும் இவ்வழக்கின் தாவா சொத்தையும் வழக்கறிஞர் திரு.செந்தில்நாதன் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் சொத்தின் விஸ்தீரணம் தவறாக உள்ளது என்றும் ஏறக்குறைய 2 செண்டிற்கு மேல் ஆக்கிரமிப்பு உள்ளது என்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை ஆக்கிரமித்த காரணத்தினால் தான் தாவா சொத்தின் விஸ்தீரணம் தவறு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அவ்வாறு ஏதும் குறிப்பிடவில்லை. நான் எனது முதல் விசாரணையில் வாதி திருப்பனந்தாள் என்ற ஊரை பூர்வீகமாக கொண்டவர் என்று எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் எனது தாத்தா வீட்டு வேலைக்காக வாதியின் தகப்பனாரை அழைத்து வந்தார்கள் அதனால் தெரியும். வாதி வெளியூரை சேர்ந்தவர் என்பதாலும் ஆள்பலம் இல்லாதவர்கள் என்பதாலும் தாவா சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்க கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.27 15:49:37 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal